தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

## தமிழ்மொழி

### வளர் தமிழ் 4

சுட்டெண்:............................................................ நேரம்: 120 மணித்துளிகள்

**1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. **ன்** என்ற எழுத்து ______________ .

   ( உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து )

2. இலக்கண நூல்களில் முதன்மையானது ______________ .

   ( தொல்காப்பியம், நாலடியார், மூதுரை )

3. காணாமற்போன சிறுவனைத் ______________ முயன்றனர்.

   ( காண, பார்க்க, தேட )

4. ஆவல் என்பதன் பொருள் ______________ .

   ( பெருவிருப்பு, விடாமுயற்சி, மகிழ்ச்சி )

5. **குறள்:**

   உடுக்கை ______________ கைபோல ஆங்கே

   இடுக்கண் களைவதாம் நட்பு

   ( இலந்தவன், இளந்தவன், இழந்தவன் )

6. தமிழருடைய சிறந்த கொண்டாட்டங்களில் ஒன்று______________.

   ( நத்தார்விழா, ஆடிப்பிறப்பு, ஆண்டுவிழா )

7. அங்கே பல பழங்கள் உள்ளன. ______________ ஒன்றை நீ தேர்ந்து எடு.

   ( அவற்றுள், ஒவ்வொன்றும், இவற்றுள் )

8. பழந்தமிழர் தோற்கருவிகளின் நுணுக்கங்களை நன்கு

________________ இருந்தனர்.

( அறியாமல், அறிந்து, மறந்து )

9. "பழகப் பழகப் பாலும் புளிக்கும்." இது ________________ .

( பழமொழி, குறள், பாடல் )

10. நேற்று எழிலன் நாடகம் ________________ .

( நடித்தான், நடிக்கின்றான், நடிப்பான் )

11. கங்காரு ________________ குட்டியை வயிற்றுப் பையில் காவிச் செல்லும்.

( உனது, எனது, தனது )

12. **நொடி:**

ஐந்து வீட்டுக்கொரு முற்றம். அது ________________ .

( உள்ளங்கை, முகம், கால் )

13. கரையில்லாதது என நாலடியாரில் குறிப்பிடப்படுவது

________________ .

( பணம், பொருள், கல்வி )

14. பின்வருவனவற்றுள் தோற்கருவி ________________ .

( ஏழில், முரசு, புல்லாங்குழல் )

15. யானை பிளிறும் சிங்கம் ____________ .

( முழங்கும், உறுமும், கத்தும் )

16. தாத்தா நீரை ____________ எனக் குடித்தார்.

( கடகட, நறநற, மடமட )

17. ____________ அழுகிய பழங்களை வாங்கி உண்ணாதே!

( நீங்கள், நீ, நாங்கள் )

18. முத்தமிழ்க்காப்பியம் என அழைக்கப்படும் நூல் ____________ .

( சிலப்பதிகாரம், மணிமேகலை, நாலடியார் )

19. 200 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________ .

( இறுநூறு, இருனூறு, இருநூறு )

20. நான் உனது வீட்டிற்கு ____________ வர வேண்டும்?

( இப்பொழுது, எப்பொழுது, அப்பொழுது )

21. பூஞ்சோலையில் ____________ மலர்கள் பூத்திருக்கின்றன.

( மெல்லமெல்ல, பாளம்பாளமாக, வண்ணவண்ண )

22. இரு கைகளிலும் கோல்களுடன் ஆடப்படுவது ____________ .

( கோலாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம் )

23. வில்லின் வடிவில் செய்யப்பட்ட இசைக்கருவி ______________ .

( வீணை, யாழ், வயலின் )

24. சிங்கத்தை அழிக்கத்திட்டம் போட்ட விலங்கு ______________ .

( முயல், புலி, யானை )

25. போர் முரசைப் ______________ என்றும் அழைப்பர்.

( மணமுரசு, கொடைமுரசு, படைமுரசு )

26. கீழ்வானம் வெளுக்கும் வேளை ______________ .

( மாலை, வைகறை, இரவு )

27. **ஒலிவட்டு:**

நாடுகாத்த சிறுவன் என அழைக்கப்பட்டவன் ______________ .

( பிரிங்கர், எடிசன், இனியன் )

28. பறவைகள் வானத்தில் ______________ ப் பறந்தன.

( சாரிசாரியாக, கூட்டங்கூட்டமாக , ஓடஓட )

29. நெல், சாமை, வரகு என்பன ______________ .

( கனிகள், கூலங்கள், காய்கறிகள் )

30. அடக்கம் உடையார் அறிவிலர் என்னும் பாடல் இடம்பெற்ற நூல் ______________ .

( மூதுரை , நல்வழி, ஆத்திசூடி )

புள்ளிகள் 30

**2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| பளபள | ஊண்உறக்கம் | அக்கறையை |
| காலங்காலமாக | மெல்லமெல்ல | |

1. கதை கூறும் வழக்கம் தமிழர் பண்பாட்டில் ____________________ நிலவுகிறது.

2. ____________________ த் தொடங்கிய தூறல் பெருமழையானது.

3. உழவர் ____________________ இன்றி உழைக்கின்றனர்.

4. வெயிலில் கிடந்த கண்ணாடி ____________________ என மின்னியது.

5. பொழிலன், பெற்றோர் தன் மீது கொண்டுள்ள ____________________ எண்ணி மகிழ்ந்தான்.

புள்ளிகள் 05

**3) பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. நேற்று அப்பாவும் நானும் பூங்காவுக்குச்

______________________________ .

2. முயற்சி உடையோர் புகழோடு ______________________________ .

3. உயிர்களைத் துன்புறுத்த முயற்சி ______________________________ .

4. சிறுமி கலகல எனச் ______________________________ .

5. தமிழ்மொழி இயல் இசை நாடகம் என முப்பிரிவுகளைக்

______________________________ .

புள்ளிகள் 10

**4) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

யாழ்ப்பாணத்தில் பல சிறந்த புலவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களில் ஒருவர் குமாரசுவாமிப்புலவர். இவர் சுன்னாகம் என்ற ஊரில் பிறந்தார். இவர் சிறுவனாக இருந்த பொழுதே பல பாடல்களைப் பாடினார். குமாரசுவாமிப்புலவர் ஆறுமுகநாவலருடன் நட்புக் கொண்டிருந்தார். சி.வை.தாமோதரம்பிள்ளை என்பவரால் முதன்முதல் கட்டப்பட்ட தமிழ்ப் பள்ளி சைவப்பிரகாசவித்தியாசாலை. இப்பள்ளியில் குமாரசுவாமிப்புலவர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். இவர் மதுரைத் தமிழ்க் கழகத்தில் உறுப்பினராக இருந்தார். இவ்வாறு தமிழுக்குப் பணியாற்றிய புலவரை நாம் என்றும் மறவோம்.

1. குமாரசுவாமிப்புலவர் பிறந்த ஊர் எது?

___________________________________________

2. குமாரசுவாமிப்புலவர் யாருடன் நட்புக் கொண்டிருந்தார்?

___________________________________________

3. முதன்முதலில் தமிழ்ப் பள்ளியைக் கட்டியவர் யார்?

___________________________________________

4. எப்பள்ளியில் குமாரசுவாமிப் புலவர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்?

___________________________________________

___________________________________________

5. மதுரைத்தமிழ்க் கழகத்தில் உறுப்பினராக இருந்தவர் யார்?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| வழிகாட்டியான | காலத்தில் | குணநலன்களை |

| | |
|---|---|
| அறிவு | நன்மை |

நட்பு அறிதல் என்பது ஒருவர் தாம் நட்புக்கொள்ள விரும்புபவரைப் பற்றி அறிவதாகும். அவருடைய ____________________ அறிந்து நட்புக் கொள்ள வேண்டும். தீயவர்களின் நட்பை விலக்கிவிடுவதே எமக்கு ____________________ தரும். உண்மையான நட்பே எமக்கு உயர்வைத் தரும். நல்ல நண்பர்களை எமக்குக் கேடு விளைகின்ற ____________________ அறியலாம். நாம் அறிந்தோ அறியாமலோ தவறு செய்யும் போது கண்டித்து ____________________ உரைப்பவர்களே நல்ல நண்பர்கள். தமிழ் இலக்கியங்களில் உயர்ந்த நட்புப் பற்றி நிறையச் சொல்லப்படுகிறது. வாழ்க்கை ____________________ திருக்குறளிலும் அறநூல்களில் ஒன்றான நாலடியாரிலும் நட்பின் உயர்வுபற்றிப் பாடப்பட்டுள்ளது.

புள்ளிகள் 10

## 6) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. கண்ணகிக்குச் சிலை வடித்த மன்னன் யார்?

______________________________

______________________________

2. தமிழரின் தாயகங்கள் எவை?

______________________________

______________________________

3. ஆடிப்பிறப்பன்று செய்யப்படும் பண்டங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________

______________________________

4. தோற்கருவிகளை எவ்வாறு அழைப்பர்?

______________________________

______________________________

5. நாலடியாரில் உள்ள பாடல்கள் ஒவ்வொன்றும் எத்தனை அடிகளைக் கொண்டவை?

______________________________

______________________________

புள்ளிகள் 10

7) பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| முடிவு | வரைந்த | செய்து |
| கற்க | சேர்ந்த | |

1. தம்பி வீட்டுப்பாடங்களை விரைவாகச் ____________முடித்தான்.

2. நாம் எதையும் எண்ணிப் பாராமல் ___________எடுக்கக் கூடாது.

3. உலகில் பல்வேறு இனங்களைச் ________________ மக்கள் வாழ்கின்றனர்.

4. நண்பன் ________________ ஓவியத்தைப் பார்த்து மகிழ்ந்தேன்.

5. பாடங்களை ஐயந்தீரக் ________________வேண்டும்.

புள்ளிகள் 05

8) தரப்பட்டுள்ள சொற்களை உமது வாழிட மொழியில் எழுதுக.

1. இசைக்கருவி ____________________

2. மகிழ்ச்சி ____________________


3. நூலகம் ____________________

4. ஒட்டகம் ____________________

5. பள்ளிப்பை ____________________

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதையைத் தொடர்ந்து எழுதுக.**




காகம் ஒன்று தாகத்தினால் அங்கும் இங்கும் பறந்து திரிந்தது.
அப்பொழுது அது தண்ணீர் உள்ள பானை ஒன்றைக் ......

புள்ளிகள் 15